பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 14 வியாழக்கிழமை 31.10.2024 கதிர் 358

### இது ரகசியம் அல்ல!

அரசநிர்வாகத்தில் உள்ளவர்கள் அரசியல்வாதிகளைக் குறைகூறும் அளவிற்குதம்சரியாகநடக்கிறார்களா என்பதை மிகப் பெரிய அளவில் கேள்விக்குட்படுத்தும் தகவல் ☞2

### 2016இல் ஏற்படுத்தப்பட்ட

# இந்திய – இலங்கை அரசுகளின் இணைக்கப்படி பேச்சு மீளத் தேவை

### ஜனநாயகக் கூட்டணியின் கோரிக்கை இது




2016ஆம் ஆண்டில் இலங்கை, இந்திய அரசுகள் மேற்கொண்ட கூட்டு இணைக்கத்தின் அடிப்படையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தல், புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர்களுக்குப் பகிர்ந்தளிக் கப்படவேண்டும். இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் ☞2

## புதிய புரட்சிக்கு வழிவகுப்பதாக தீபாவளியை கொண்டாடுவோம்

### ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி

தீபங்களை ஏற்றி இலங்கையர்களாக புதிய புரட்சிக்கு வழிவகுப்பதாக இம்முறை தீபாவளிபண்டிகையைகொண்டாடுவோம் என தனது வாழ்த்துச்செய்தியில் ☞2

## பிரதமரின் தீபாவளி வாழ்த்து

தீபாவளிகொண்டாடும்அனைவருக்கும் மகிழ்ச்சியான, அர்த்தமுள்ள, அமைதியான தீபாவளி வாழ்த்துக்கள் என தனது வாழ்த்துச்செய்தியில் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். ☞8

## அமைச்சரின் தீபாவளி வாழ்த்து

அமைச்சர் விஜித ஹேரத் விடுத்துள்ள தீபாவளிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆன்மீகத்தில் அறியாமை என்னும் இருளுக்கு எதிரான ஒளியின் வெற்றியையும், தீமையின் மீது நன்மையையும், அநீதியின் மீது தர்மத்தை நிறுத்துவதும், தீபாவளியின் பிராதன ☞2



## முதலாவது வரவு – செலவு திட்டத்தில் அரச ஊழியருக்கு சம்பள அதிகரிப்பு

### ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க அறிவிப்பு

முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மிகக் குறுகிய காலமே நாங்கள் ஆட்சியில் இருந்து வருகிறோம் என்பது அவர்களுக்குத் தெரியும். எங்களிடம் சில இடங்களில் மட்டுமே அதிகாரம் உள்ளது. அரசியல் அதிகாரம் பல நிறுவனங்களின் பலத்தால் தீர்மானிக்கப்படுகிறது. ஜனாதிபதி பதவி என்பது அரசியல் அதிகாரத்தின் வலுவான இடமாகும். அமைச்சரவை ஒரு வலுவான இடம். ஆனால் அமைச்சரவையில் நாங்கள் மூவர்தான் இருக்கிறோம். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஒரு அமைச்சர். உலக சாதனையில் இடம்பிடிக்கும் அமைச்சரவையாகும். பலமான அமைச்சரவையை அமைக்கவிடாமல் இதை எப்படி அசைக்கலாம் என்று பார்க்கிறார்கள். அதனால்தான் ☞8

## தொடருந்து நிலைய அதிபர்கள் வேலை நிறுத்தத்தில் குதிப்பு

### பயணிகளுக்கு இலவசப் பயணம்

தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தொடருந்து அதிபர்கள் சங்கத் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சருடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தொடருந்து நிலைய அதிபர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டாலும் தொடருந்து சேவைகள் வழமை போன்ற இயங்குவதுடன், பயணிகள் பயணச்சீட்டு இன்றிப் பயணிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இருக்கைகளுக்கான முன்பதிவுகளையும் பொதிகளுக்கான சேவைகளையும் முன்னெடுக்கப்போவதில்லை எனவும் ☞8

## ரஞ்சனுக்கு ஆதரவாக தீர்ப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய ஜனநாயக குரல் கட்சியின் கீழ் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் வேட்புமனுவை நிராகரிக்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பிரதிவாதி தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த ஆட்சேபனைகளை பரிசீலித்த நீதியரசர்கள் பிரீத்தி பத்மன் சூரசேன, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய ஆயம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நாடாளுமன்ற ஆசனம் பெறவோ அல்லது வாக்களிக்கவோ உரிமை இல்லை என ☞8

## ஆளும்தரப்பின் செயல்களுக்கு மக்களே தகுந்த பதிலடி தருவர்

### சாபம் விட்ட உதய கம்மன்பில

ஆளும்தரப்பின் முறையற்ற செயற்பாடுகளுக்கு மக்கள் தகுந்த பதிலடிகொடுப்பார்கள் என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

புறக்கோட்டை பகுதியில் ☞2

## ஐமச ஆட்சிக்கு வந்தால் வரிகளைக் குறைக்கும்

### ரணிலின் ஒப்பந்தம் நிறுத்தப்படும் என்கிறார் சஜித்

தற்போதைய ஆளும் தரப்பால் சர்வதேச நாணய நிதியத்துடன் பேசி வரிகளைக் குறைக்க முடியாது போயுள்ளது. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியால் அதைச் செய்ய முடியும். நாடாளுமன்றத் தேர்தலில் நாம் வென்றால், ரணில் நாணய நிதியத்துடன் செய்த ஒப்பந்தத்தை நிறுத்தி புதிய ஒப்பந்தம் செய்வோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியில் நேற்று நடந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஜனாதிபதி அநுர, ஜனாதிபதி தேர்தலின் போது வழங்கிய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தவறிவிட்டார். வற்வரி, நேரடி மற்றும் மறைமுக வரிகளைப் குறைப்போம் என்றார். ஆனால் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு ☞8

## ஜனாதிபதி அநுரகுமார சிறப்பாக நிர்வகிக்கிறார்

### எஸ்.பி.திசநாயக்க திடீர் பாராட்டு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சிறந்த முறையில் நாட்டை நிர்வகிக்கிறார். வழங்கிய வாக்குறுதிகளை ஒரு மாதத்துக்குள் நிறைவேற்ற முடியாது. ஆனாலும் ஆளும்தரப்பை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளை ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கின்றனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2020 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ச முறையற்ற ☞2

## பாகிஸ்தான் உயர்ஆணையர் பிரதமருடன் நேற்றுச் சந்திப்பு

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஃபஹீம் உல் அஸீஸ் மற்றும் இலங்கை பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று பிரதமர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இந்தச் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

ஒன்றுவெளியாகிஉள்ளது.அரசியல்வாதிகளை கடந்த காலங்களில் கிழித்துத் தொங்கவிட்ட தொழிற்சங்கங்களில் ஒன்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம். மருத்துவ் அருச்சுனா யாழ்ப்பாணத்தில் புகழ்பெறுவதற்குக் காரணமாக இருந்ததும் இந்தச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைதான். கடந்த சில வருடங்களாக மருந்துத் தட்டுப்பாடு தொடர்பில் ஆட்சியாளர்களை இந்தச் சங்கம் குறைகூறாத ஒரு நாள் கிடையாது.

இப்போது என்னடாவென்றால், அநுராதபுரத்திற்கு அனுப்பப்பட்ட மருந்துப் பொருள்கள் பல 2 மாதங்களுக்கும் மேலாக தொடருந்துப்பெட்டியிலிருந்தேஅகற்றப்படாமல் வெயில் காய்கிறது என்று கணக்காய்வாளர் நாயகம் கண்டுபிடித்திருக்கிறார்.

தேசிய கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம்வெளியிட்டுள்ளஅறிக்கையின்படி, சுகாதார அமைச்சகத்தின் மருத்துவ வழங்கல் பிரிவு அனுப்பிய பல கோடி மதிப்புள்ள மருந்துகள் 45 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அகற்றப்படாமல் தொடருந்து பெட்டிகளிலேயே கிடக்கின்றன.

கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்தில் இருந்து அனுராதபுரம் தொடருந்து நிலையத்திற்கு அனுப்பப்பட்ட இந்த மருந்துகளை பொறுப்பான சுகாதார நிறுவனங்கள் கடந்த வருடம் முதல் 6 மாதங்களில் வைத்தியசாலைகளுக்கு விநியோகிப்பதற்காக வழங்கப்பட்டவை. அவை தொடருந்து நிலையத்தில் இருந்து அகற்றப்படாமைக்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை. மருத்துவத்துறை அதிகாரிகளின் கவனக் குறைவே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. மருத்துவத்துறை நிர்வாகம் எப்போதும் மருத்துவர்களாலேயேகையாளப்படுகின்றது.

இந்த மருந்துகளை அகற்றாததால், தொடருந்து துறைக்கு செலுத்த வேண்டிய காலதாமதக் கட்டணத்தின் மொத்த மதிப்பு வேறுஐம்பதுலட்சம்ரூபாயைநெருங்குகிறது.

மருந்தில்லை, அரசு மருந்துகளைக் கொள்வனவு செய்து தருவதில்லை என்று குற்றஞ்சாட்டுபவர்கள் வாங்கிக் கொடுத்த மருந்துகளை ஒழுங்காகப் பயன்படுத்தவேண்டுமா இல்லையா?

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## இந்திய ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர்14நடைபெறவுள்ளநாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று யாழ்ப்பாணத்தில் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது.

கூட்டணியின் பங்காளிக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சித்தார்த்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடந்தது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்உடைவு, தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகள் எனப் பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 8 முக்கிய அம்சங்களை அந்தக் கூட்டணி முன்வைத்துள்ளது.

அவற்றில், 'தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொண்டால்தான் இலங்கைத்தீவின் பல்லினத்தன்மையை உறுதிப்படுத்தலாம். எனவே, புதிய அரசமைப்பானதுஇலங்கைத்தீவின்பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில், அதாவது இலங்கைத் தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் கட்டமைக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களில்தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்களை ஒன்றிணைந்ததாக அமையவேண்டும். குறித்த சுயநிர்ணய அலகுக்குள் வாழும் முஸ்லிம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சு நடத்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எப்போதும் தயாராக உள்ளது.

மலையகத்தமிழ்மக்களின்தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தரத் தீர்வுவழங்கப்படவேண்டும். மேலும்உடனடிப் பிரச்சினைகளுக்கும் அவர்கள் தொடர்ச்சியாக முன்வைத்துவரும் கோரிக்கைகளுக்கும் தீர்வுகள் வழங்கப்படவேண்டும். இந்தத் தீர்வுகளுக்கான போராட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு நடத்திய இன அழிப்பு, போர் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டுநீதித்துறைக் கட்டமைப்புக் கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகளின் மீள்நிகழாமையை உறுதி செய்யவேண்டும். இதுவரையிலுமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின்தொகுக்கப்பட்ட அனுபவமாக, ஐ.நா. பொதுச்செயலாளரின்பொறுப்புக்கூறலை ஐ. நா. பொதுச் சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும்.

அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பைத் தடுக்கவும், நமது வளங்கள் இன அழிப்பின் ஒருபகுதியாகச்சுரண்டப்படுவதைத்தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின்சமநிலைகுலையாதவகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும்.

இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு, புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.

எமது நாட்டின் கடல் வளங்கள் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கும், கடற்றொழிலாளர்கள் சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குமான வகையில், 2016ஆம் ஆண்டில் இலங்கை, இந்திய அரசுகள் மேற்கொண்ட கூட்டு இணக்கத்தின் அடிப்படையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தல்,

1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க மற்றும் 2017 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டங்களை உறுதியான முறையில் நடைமுறைப்படுத்துதல், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலுவாக்குதல், மீனவக் கிராமங்களிலிருந்து படைத் தரப்பினர் வெளியேறுதல்போன்றநடவடிக்கைகள்மூலம் அம்மக்களின்பாதுகாப்பும்வாழ்வாதாரங்களும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

ஒரு நிரந்தர தீர்வை கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கத்தோடும் – தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின் கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உருவாக்கப்படவேண்டும்.' - என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், சி.வேந்தன், சசிகலா ரவிராஜ், குருசுவாமி சுரேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

## பாகிஸ்தான் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பில், இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய பிரதமர், பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் பகிர்ந்து கொள்ளப்பட்ட நீண்ட மற்றும் சுமூகமான உறவுகளுக்குதனதுநன்றியைத்தெரிவித்தார்.

பரஸ்பர ஆர்வமுள்ள பகுதிகளில் இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இரு தலைவர்களும் கவனம் செலுத்தினர்.

இந்த சந்திப்பில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின்உயர்அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இலங்கை அதிகாரிகளில் பிரதமரின்செயலாளர்பிரதீப்சபுதந்திரி, மேலதிக செயலாளர் மஹிந்த குணரத்ன மற்றும் வெளிவிவகார அமைச்சின் தெற்காசியா மற்றும் சார்க் பிரிவின் பணிப்பாளர் நாயகம் இராஜதந்திரப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் நிலுகா கதுருகமுவ ஆகியோர் அடங்குவர்.

## புதிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இருள்நீங்கிஒளிமயமாவதைஅடையாளப் படுத்தும்முகமாகஉலகவாழ்இந்துபக்தர்களால் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

சுதந்திரத்திற்கு பின்னர் இருளிலிருந்து வெளிச்சத்தை தேடிவந்த இலங்கை மக்கள் தற்போது புதிய எதிர்பார்ப்புக்களை சுமந்துக்கொண்டிருக்கின்றனர். இது மக்களின் பல வருட எதிர்பார்ப்பாகும்.

இத்தனைநாட்களாகஇலங்கையைஆட்சி செய்தவர்களால் முடக்கி வைக்கப்பட்டிருந்த பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை மலரச் செய்யும் மாற்றத்துக்கான யுகத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

தீபாவளிக் கொண்டாட்டத்திற்கு பல காரணங்கள்உள்ளன. 14வருடவனவாசத்தின் பின்னர் இராமர், இலட்சுமனர், சீதை மீண்டும் அயோத்திக்கு வருகை தந்தமை மற்றும் கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தமையை நினைவுகூறும் விதமாக இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது.

அஞ்ஞானத்தின் இருளை போக்க மெய்ஞானத்தின் ஒளியினால் மட்டுமே முடியும் என்ற தொனியில் தீபங்களை ஏற்றி இலங்கையர்களாக புதிய புரட்சிக்கு வழிவகுப்பதாக இம்முறை தீபாவளி பண்டிகையை கொண்டாடுவோம் என மக்களிடம் கேட்டுகொள்கிறேன்.

கலாசார பல்வகைத்தன்மையின் அழகை மெருகூட்டும் வகையில், ஒருவருக்கொருவர் கௌரவம், ஏற்றுக்கொள்ளல் மற்றும் சகோதரத்துவம் என்பவற்றுக்காக கரங்களை நீட்டுவோம்.

பிரித்து வலுவிழக்கச் செய்யப்பட்ட இலங்கை தேசத்தை பிளவுபடாமல் வலுவாக முன்னோக்கிக் கொண்டுச் செல்ல வேண்டிய காலம் உதயமாகியுள்ளது. அநீதி, வேறுபாடுகள், பிளவுபடுத்தல், வெறுப்புப் பேச்சுகள், வன்முறைகள் என்பதை முழுமையாக துடைத்தெறிந்து சமூகத்தில் வரப்பிரசாதங்களை பெற்றுக்கொள்வோர் மற்றும் வரப்பிரசாதங்கள் கிடைக்காதவர்கள் என்ற வேறுபாடுகளை முழுமையாக இல்லாது செய்ய முன்வருவோம்.

அவ்வறான, இரக்கம் கொண்ட ஒரு புதிய கலாசார இருப்பை உருவாக்க முன்வருமாறு அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். இந்தத் தீபாவளியில், வளமான நாடு மற்றும் அழகான வாழ்க்கை என்ற நமது எதிர்பார்ப்பு நனவாக வேண்டுமானால், அதற்கான கலாசார, அரசியல் ரீதியான மனப்பாங்கு மாற்றமும் அவசியமாகும்.

தீபாவளி தினத்தில் அனைத்து வீடுகளிலும், நகரங்களிலும்ஏற்றப்படும்ஆயிரக்கணக்கிலான விளக்குஒளிகள்அனைவரினதும்மனங்களில் நட்புறவு மற்றும் ஞானத்தின் ஒளியை பரவச் செய்வதாக அமையட்டும் என பிரார்த்திப்பதோடு இலங்கைவாழ் இந்து பக்தர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன் என்றுள்ளது.

## அமைச்சரின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கமாகும்.

நரகாசூரன் எனும் கொடிய அரக்கனை திருமகள் துணையுடன் திருமால் அழித்த தினத்தை நினைவு கூறும் வகையில் இந்து சகோதர, சகோதரிகள் தீபாவளியை கொண்டாடுகின்றனர். தீமைக்கு எதிராக நன்மையும், அறியாமைக்கு எதிராக அறிவையும் நிலைநாட்டப்பட்ட நாளாக, தெய்வீக ஒளியைப் போற்றிக் கொண்டாடும் தீபத்திருநாளாக, தமிழ் மக்கள் இவ்விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுவதாக உரிய ஆதாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஒரு வளமான நாடு - ஒரு அழகான வாழ்க்கை' என்ற கருப்பொருளுடன் ஒரு புதிய மறுமலர்ச்சியை நோக்கி அடியெடுத்து வைக்கும் ஒரு தேசத்தை உருவாக்கும் சிறந்த பணியில், தீபாவளியின் மேற்குறிப்பிடப்பட்ட யதார்த்த கருப்பொருளுக்கு ஒரு சிறப்பு இடம் உண்டு என்பதை இங்கு குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

## ஆளும்தரப்பின் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட அல்விஸ் மற்றும் இமாம் குழு அறிக்கைகளை ஆளும்தரப்பு நிராகரித்துள்ளது. இவ்விரு அறிக்கைகளையும் புறக்கணிப்பதற்கு ஆளும்தரப்புக் குறிப்பிடும் காரணிகள் அடிப்படையற்றவை, சிறுபிள்ளைத்தனமானவை.

விசாரணைக் குழுக்களில் ஒன்றின் தலைவரான அல்விஸ் முறையற்ற செயற்பாடுகளினால் நீதிபதி பதவியில் இருந்து நீக்கப்பட்டார், ஆகவே அவர் தலைமையிலான குழு அறிக்கையை ஏற்க முடியாது என்று ஆளும்தரப்பின்நிலைப்பாட்டை அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

அல்விஸ் குழுவின் தலைவர் மீது முன்வைக்கும் குற்றச்சாட்டை நிரூபிக்குமாறு அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத்திடம் வலியுறுத்தினேன். இதுவரை எவ்விதமான குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை.

ஏதேனும்விடயம்தொடர்பில்ஆராய்வதற்கு குழு நியமிக்கப்படும்போது குழுவின் உறுப்பினர்கள் தொடர்பில் ஏதேனும் ஆட்சேபனைகள்காணப்படுமாயின்அவற்றை ஆரம்பத்திலேயே குறிப்பிடவேண்டும். குழு அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னர் அதன் உள்ளடக்கம் தமக்கு எதிரானதாக இருப்பதை அறிந்து அறிக்கைகளை எதிர்க்கக்கூடாது.

அல்விஸ் அறிக்கையை போன்றே இமாம் அறிக்கையையும் ஆளும்தரப்புப் புறக்கணித்துள்ளது. புறக்கணிப்புக்கான காரணிகள் அடிப்படையற்றன, சிறுபிள்ளைதனமானது. ஊடகசந்திப்பைநடத்தி அறிக்கைகளைபுறக்கணிப்பதாககுறிப்பிடாமல் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு சென்று புறக்கணிப்பதற்கானகாரணத்தைஆளும்தரப்பு ஆதாரபூர்வமாக முன்வைக்க வேண்டும்.

குண்டுத் தாக்குதலின் பிரதான குற்றவாளிகளாகபெயர்குறிப்பிடப்பட்டுள்ளரவி செனவிரத்ன, சானி அபேசேகர ஆகியோரை வைத்துக் கொண்டு எவ்வாறு சிறந்த மற்றும் சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுக்க முடியும்.

குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்ட இரண்டு தாக்குதல்தாரிகளின் தந்தையான மொஹமட் இம்ராஹிமை பாதுகாப்பதற்காகவே குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை ரவி செனவிரத்ன மற்றும் சானி அபேசேகர தலைமையில் முன்னெடுக்க ஆளும்தரப்பு முயற்சிக்கிறது. ஆளும்தரப்பின் முறையற்ற செயற்பாடுகளுக்கு மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள் என்றார்.

## ஜனாதிபதி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் செயற்பட்டதன் விளைவையே இன்று சிரேஷ்ட அரசியல்வாதிகள் எதிர்கொள்கின்றனர் என்ற உண்மையை அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அரசியல்வாதிகளுக்கு தகுந்த பாடம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஜனாதிபதி அநுரகுமார மற்றும் அவர் தலைமையிலான ஆளும்தரப்பின் மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. உறுதியான ஆளும்தரப்பு என்பதொன்று தற்போது இல்லை என்பதை மறந்து விட்டனர். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வழங்கிய வாக்குறுதிகளை ஒரு மாத காலத்துக்குள் நிறைவேற்ற முடியாது.

நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறவுள்ளது . தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தை மக்கள் தோற்றுவிக்க வேண்டும் என்பதை நாட்டு மக்களிடம்வலியுறுத்துகிறேன். ஜனாதிபதியின் கொள்கைகளை செயற்படுத்த அவருடன் இணக்கமாக செயற்பட கூடிய தரப்பினரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

மாற்றுக் கொள்கைகளையுடைய தரப்பினரைத் தெரிவு செய்தால் நல்லாட்சி போன்று முரண்பாடான நிர்வாக கட்டமைப்பே தோற்றம் பெறும் என்பதை மக்கள் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

சிறந்த அரசியல் மற்றும் அரச நிர்வாக கட்டமைப்பை உருவாக்க ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆரம்பித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பின் நெருக்கடி நிலைமைக்கு ஓரிரு நாட்களில் தீர்வு காண முடியாது. ஜனாதிபதிக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சிறந்த முறையில் நாட்டை நிர்வகிக்கிறார். வழங்கிய வாக்குறுதிகளை ஒரு மாதத்துக்குள் நிறைவேற்ற முடியாது. அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளை ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கின்றனர். நாட்டு மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பயங்கரவாத தடைச்சட்டத்தை தேசிய மக்கள் சக்தி எதற்காகத் தொடர்ந்தும் தக்கவைக்கவிரும்புகிறது?

## அம்பிகா சற்குணநாதன் கேள்வி



பயங்கரவாத தடைச்சட்டம் சர்வதேச மனித உரிமை தராதரங்களை பின்பற்றியதாகக் காணப்படவில்லை என ஐக்கிய நாடுகள், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு உட்பட பலவற்றின் ஆய்வுகள் தெரிவித்துள்ளதை அனுரகுமாரதிசநாயக்க மறக்க முடியாது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார். மனித உரிமைகள் விடயத்தில் குறைபாடுள்ள சட்டத்தை தேசிய மக்கள் சக்தி தக்கவைக்கவிரும்புகின்றது என அந்த கட்சியால் தெரிவிக்க முடியுமா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சமூக ஊடக பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் பிரச்சினையில்லை, மாறாக அது தவறாக பயன்படுத்தப்படுவதே பிரச்சினை என தேசிய மக்கள் சக்தி தெரிவிக்கின்றது - பயங்கரவாத தடைச்சட்டத்தை தொடர்ந்து தக்கவைப்பதற்கான காரணமாக தேசிய மக்கள் சக்தி இதனை தெரிவிக்கின்றது.

பயங்கரவாததடைச்சட்டம் பத்திரிகையாளர்கள் சிவில்சமூகத்தினருக்கு எதிராக பயன்படுத்தப்பட்டதே பிரச்சினைக்குரிய விடயம் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் அது இடம்பெற அனுமதிக்கமாட்டோம் என குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் சர்வதேச மனித உரிமை தராதரங்களை பின்பற்றியதாக காணப்படவில்லை என ஐக்கிய நாடுகள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு உட்பட பலவற்றின் ஆய்வுகள் தெரிவித்துள்ளதை அனுரகுமாரதிசநாயக்க நீங்கள் மறக்க முடியாது.

இலங்கை இந்த சர்வதேச சட்டங்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. இதன் காரணமாக அதனை கடைப்பிடிக்கவேண்டிய கடப்பாடு உள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் சிறைச்சாலைஆய்வுஉட்படபலஆய்வுகளில்கிடைத்த ஆதாரங்கள் பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்கள் முஸ்லீம்களிற்கு எதிராக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்இவர்கள்பத்திரிகையாளர்களேஅல்லது சிவில் சமூகத்தினரோ இல்லை என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

ஆகவே இது பழிவாங்குவது குறித்தது இல்லை. மாறாக ஆனால் ஆழமாக வேரூன்றிய இனமதரீதியான பாகுபாடுகளை அடிப்படையாக கொண்டது.

பயங்கரவாததடைச்சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுப்போம் என அரசாங்கம் தெரிவிக்கின்ற அதேவேளை பொலிஸார் உரிய நடைமுறைகளை புறக்கணித்தே அதிகளவில் செயற்படுகின்றனர் என்பது வெளிப்படையாக தெரியும் விடயம்.

பயங்கரவாத தடைச்சட்டம் மூலம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள பரந்துபட்ட அதிகாரங்கள் துஸ்பிரயோகங்களையும் தண்;டனையின் பிடியிலிருந்து விலக்களித்தலையும் அதிகரிக்கின்றன தீவிரப்படுத்துகின்றன.

மனித உரிமை மீறல்களை அதிகரிக்க கூடிய ஏனையபல ஏற்பாடுகள் பயங்கரவாத தடைச்சட்டத்தில் காணப்படுகின்றன.

அடிப்படை உரிய செயல்முறைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதால் சட்டமே ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது,

மனித உரிமைகள் விடயத்தில் குறைபாடுள்ள சட்டத்தை தேசிய மக்கள் சக்தி தக்கவைக்கவிரும்புகின்றது என அந்த கட்சியால் தெரிவிக்க முடியுமா? - என்றுள்ளது.(05)

# திட்டமிட்டப்படி உயர்தர பரீட்சை நடைபெறுமாம்

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தரதார உயர்தர பரீட்சை பிற்போடமாட்டாது திட்டமிட்டப்படி நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் புதன்கிழமை தெரிவித்துள்ளது.

அதன்படி, கல்விப் பொதுத்தரதார உயர் தர பரீட்சை நவம்பர் மாதம் 25 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவித்துள்ளதாவது -

மாணவர்கள் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து மாத்திரம் பரீட்சைநேர அட்டவணையை பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

பரீட்சை திகதி குறித்து சமூக ஊடகங்களில் போலி தகவல்கள் பரப்பப்பட்டு வருகிறது.

எனவே, மாணவர்கள் தயவுசெய்து பரீட்சை திணைக்களம் மற்றும் அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில்வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ அறிவிப்புகள் மற்றும் சுற்றறிக்கைகளை மட்டும் கவனத்தில் கொள்ளுங்கள். சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலி தகவல்களை நம்பவேண்டாம் எனத் தெரிவித்துள்ளார்.

(05)

# மது அருந்தும்போது தகராறு: ஒருவர் அடித்துக் கொலை

ஹித்தோகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அத்துருவெல்ல பிரதேசத்தில் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹித்தோகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் ஹித்தோகம, அத்துருவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

கொலை செய்யப்பட்டவர் கடந்த 27 ஆம் திகதி அன்று நான்கு நபர்களுடன் இணைந்து மது அருந்திக்கொண்டிருந்துள்ள நிலையில் கொலை செய்யப்பட்டவருக்கும் மற்றுமொரு நபருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதன்போது, சந்தேக நபர் கொலை செய்யப்பட்டவரின்தலையில்பலமாகத்தாக்கியுள்ளார் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து,பொலிஸாரால்மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் 33 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹித்தோகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மரத்தில் மோதி லொறி விபத்து

## இருவர் படுகாயம்

குருணாகல் - அநுராதபுரம் பிரதான வீதியில் வாரியப்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று (புதன்கிழமை) அதிகாலை 03.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று மரமொன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (05)




# சுமுகமாக நடைபெற்ற தபால்மூல வாக்களிப்பு

## வவுனியாவில் நேற்று

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்திலும் குறித்த வாக்களிப்பு செயற்பாடுகள் சுமுகமாக நடைபெற்றுவருகிறது.

குறிப்பாக மாவட்டசெயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார்,தேர்தல்அலுவலக உத்தியோகத்தர்கள் நேற்றையதினம் தமக்கான தபால் வாக்கை அளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நேற்று காலை 8.30 மணிமுதல் வவுனியா மாவட்டசெயலகம் மற்றும் பொலிஸ் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் குறித்த தரப்பினர் தமது வாக்கை செலுத்திவருகின்றனர்.

இதேவேளை வன்னிதேர்தல் மாவட்டத்தில் 14,060 பேரின் தபால் வாக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என வன்னிமாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர் பி.ஏ.சரத்சந்திர தெரிவித்தார். அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் 5,942 பேரும், மன்னார் மாவட்டத்தில் 4,171 பேரும், முல்லைத்தீவில் 3,497 பேரின் தபால் வாக்கு விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தீபாவளியின் சிறப்பு

இன்று தீபாவளி. இந்தத் திருநாள் தமிழர்களின் விழாவா இல்லையா என்பது ஒருபுறம் கருத்தியல் சர்ச்சையாக இருந்தாலும்அதுதமிழர்களின்பண்பாட்டுஅம்சங்களில்ஒன்றாக ஊறிவிட்டது. பண்பாட்டில் மட்டுமல்ல பொருளாதாரத்திலும் அது ஒரு மிக முக்கிய அம்சம். தமிழர்களின் பொருளாதாரத்தில் மட்டுமல்லாமல் சகோதர இனங்களின் பொருளாதாரத்திலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.

இந்தப் பண்டிகை தமிழ் மாத கணக்கீட்டின்படி பெரும்பாலான வருடங்களில் ஐப்பசி மாதத்தில் வரும் அமாவாசை தினத்தன்று கொண்டாடப்படுகிறது. சில வருடங்களில் மட்டும் அமாவாசைக்கு முந்தையதினம்கொண்டாடப்படுகிறது. ஆங்கிலநாட்காட்டியின்படி, அக்டோபர் 17 முதல் நவம்பர் 15க்கு உட்பட்ட நாட்களில் தீபாவளி பண்டிகை அமைகிறது.

இந்துக்கள் மட்டுமல்லாது, சமணர்கள், சீக்கியர்களும்கூட இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர் என்பது மற்றொரு உண்மை. ஆனால் ஒவ்வொரு இனக் குழுமங்கள் மத்தியிலும் இந்தப் பண்டிகைக்கான காரணங்கள், கதைகள் வெவ்வேறானவை. அதாவது தீபாவளி ஒரே காரணத்திற்காக எல்லா மக்களாலும் கொண்டாடப்படுவதில்லை.

வட இந்தியாவில் தீபாவளிப் பண்டிகை குறித்துப் பல்வேறு கதைகள் சொல்லப்படுகின்றன. அதில் ஒன்று, ராமரோடு தொடர்புடையது. அதாவது ராமர் தனது 14 வருட வனவாசத்தை முடித்துக் கொண்டு, லட்சுமணன், சீதாவுடன் அயோத்திக்கு திரும்பிய தினத்தை அந்நாட்டு மக்கள் விளக்கேற்றிக் கொண்டாடினர். அதுவே தீபாவளி தினம் என்ற ஒரு கதை வழக்கில் இருக்கிறது.

மற்றொரு கதையில், பெரும் அட்டகாசம் செய்து வந்த நரகாசுரனை கிருஷ்ணர் வதம் செய்தபோது, தான் இறந்த தினத்தை மக்கள் அனைவரும் கொண்டாட வேண்டுமென அந்த அசுரன் கேட்டுக் கொண்டதாகவும், அதன்படியே தீபாவளி கொண்டாடப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

தீபாவளிப் பண்டிகையை பௌத்தர்களின் பண்டிகை என்று கூறும் அறிஞர்களும் இந்தியாவில் இருக்கிறார்கள். பண்டிதர் அயோத்திதாசர் 1097இல் எழுதிய கட்டுரையில் இதைக் குறிப்பிட்டிருப்பார். ஆனால் இலங்கையில் புத்தாண்டைத் தமிழர்களுடன் பகிர்ந்துகொள்ளும் பௌத்தர்கள் தீபாவளியைக் கொண்டாடுவதில்லை. அது இந்துக்களின் பண்டிகை என்று ஒதுக்கிவிடுகிறார்கள்.

அயோத்திதாசர் தீபாவளி பற்றிய தனது கட்டுரையில் எள்ளில் இருந்து எண்ணெய் பிரிப்பதை கண்டுபிடித்த, அதாவது நல்லெண்ணெய்யைக் கண்டுபிடுத்த நாளினை, இந்தியா முழுவதும் பௌத்தம் பரவி இருந்த காலத்தில் மக்கள் நிதிகளில் எண்ணெய் தேய்த்துக் குளித்துக் கொண்டாடினார்கள் என்று தெரிவித்திருப்பார். அந்தக் காலத்தில் அது தீபவதி திருநாள் என்று அழைக்கப்பட்டதாகவும் அவர் கூறுவார்.

இந்தப் பண்டிகையை சமண சமயத்தவர்களின் பண்டிகை என்று சொல்லும் அறிஞர்களும் இருந்திருக்கிறார்கள். மயிலை சீனி. வேங்கடசாமி என்ற அறிஞர், சமணர்களிடம் இருந்து இந்துக்கள் பெற்ற பண்டிகைதான் தீபாவளி என்கிறார். சமண மதத்தின் கடைசி தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் பாவாபுரி நகரத்தில் அரசனின் அரண்மனையில் தங்கியிருந்தபோது, அங்குள்ள மக்களுக்கு அறவுரை வழங்கினார். இரவு முழுவதும் நடைபெற்ற இந்தச் சொற்பொழிவு விடியற்காலையில் முடிவடைந்தது. இதனால் மக்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்லாமல் ஆங்காங்கே உறங்கிவிட்டனர். மகாவீரரும் தனது இருக்கையிலேயே வீடுபேறடைந்திருந்தார்.

பொழுது விடிந்ததும் விழித்துப் பார்த்த மக்கள் மகாவீரர் வீடுபேறடைந்திருந்ததை உணர்ந்தனர். தகவல் அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த அரசன் மற்ற அரசர்களோடு யோசனை செய்து உலகத்திற்கு ஞானஒளியாகத் திகழ்ந்த மகாவீரரை மக்கள் நினைவுகூர்ந்து வழிபடும் பொருட்டு அந்த நாளில் வீடுதோறும் விளக்குகளை ஏற்றி வைத்து விழா கொண்டாடும்படி செய்தான். மகாவீரர் விடியற்காலையில் வீடு பேறு அடைந்ததால்தான் தீபாவளியும் விடியற்காலையில் கொண்டாடப்படுகிறது‘ என்கிறார் சீனி. வேங்கடசாமி.

தீபாவளி தமிழர் பண்டிகையா இல்லையா என்பதைத் தாண்டி அது பல மதங்களைச் சேர்ந்தவர்களாலும் கொண்டாடப்பட்டிருப்பதும் கடந்த பல தசாப்தங்களாக தமிழர் பண்பாட்டி ஒரு அங்கமாக ஏற்கப்பட்டிருப்பதும் தெளிவானது. எனவே இந்தப் பண்டிகையைக் கொண்டாடும் அனைவரும் சகல உயிர்களிடத்திலும் அன்பையும் பரிவையும் வெளிப்படுத்தி இன்பம் காண்போமாக!

# ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்; தொடரும் அரபுலகின் மௌனம்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

இஸ்ரேலுக்கு எதிராக ஈரானில் இருந்து நடத்தப்பட்டதற்குப் பதில் அளிக்கும் வகையில் ஈரானில் உள்ள இராணுவ இலக்குகளை குறிவைத்து துல்லியமான தாக்குதல்களை நடத்தியுள்ளது ஈரான்.

ஈரானில் உள்ள ஆட்சியும் பிராந்தியத்தில் உள்ள அதன் ஆதரவுச் சக்திகளும் இஸ்ரேலை நீண்ட காலமாக இடைவிடாமல் தாக்கி வருகின்றனர். ஈரானிய மண்ணில் இருந்தும் நேரடி தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இவ்வாறு ஏழு முனைகளில் இருந்து இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.



உலகில் உள்ள மற்ற இறையாண்மை கொண்ட நாடுகளைப் போலவே, இஸ்ரேலுக்கும் பதிலளிக்கும் உரிமையும் கடமையும் உள்ளது. தங்கள் தற்காப்பு மற்றும் தாக்குதல் திறன்கள் முழுமையாக அணிதிரட்டப்பட்டுள்ளன என்றும், இஸ்ரேல் நாட்டையும் மக்களையும் பாதுகாக்க தேவையான அனைத்தையும் செய்வோம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் ராணுவத் தலைமை தளபதி ஜெனரல்ஹெர்சிஹலேவி, இஸ்ரேலிய விமானப் படையின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் டோமர் பாருடன் இணைந்து கேம்ப் ராபினில் உள்ள இஸ்ரேலிய விமானப்படையின் நிலத்துக்குக் கீழ் உள்ள கட்டளை மையத்தில் இருந்து ஈரான் மீதான தாக்குதல்களுக்கான உத்தரவுகளை வழங்கினர்.

கடந்த வாரம் ஈரான் தலைநகரான தெஹ்ரானில், குண்டு வெடிப்புகளின் சத்தம் கேட்டதாகத் தெரிவித்துள்ள அந்நாட்டு ஊடகங்கள், நகரத்தைச் சுற்றியுள்ள வான் பாதுகாப்பு அமைப்புகளிலிருந்து ஒலிகள் வந்ததாகவும் தெரிவித்துள்ளன. எனினும், ஈரானில் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து தகவல் இதுவரைஇல்லை.

இதனிடையே, ஈரானில் உள்ள அனைத்து வழித்தடங்களிலும் விமானங்கள் மறு அறிவிப்பு வரும் வரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டின் அரசு செய்தி நிறுவனமான ஐஆர்என்ஏ சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை அதிகாலை ஈரானின் தலைநகரான தெஹ்ரான் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியதை அடுத்து, ஈராக்கும் அனைத்து விமான நடவடிக்கைகளையும் ரத்து செய்துள்ளது.

### ஈரானுடன் அரபு நாடுகள்:

போர் சூழும் மத்திய கிழக்கில் நீண்ட கால பரம எதிகளான ஈரான் – சவுதி அரேபியா இரண்டு நாடுகளும் தங்கள் உறவை புதுப்பிப்பதாக அறிவித்து உள்ளன. சீனா மேற்கொண்ட பேச்சுவார்த்தை காரணமாக இரண்டு நாடுகளும் தற்போது கைகோர்க்க நட்புறவாக முடிவு செய்துள்ளன.

இஸ்ரேல்தாக்குதலுக்குஎதிராக இப்போது அரபு நாடுகள் எல்லாம் ஒன்றிணைந்துள்ளன. ஈரான் மீதான தாக்குதலை கண்டித்து அரபு நாடுகள் ஒரே குரலில் கூறியுள்ளமை முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

ஹிஸ்புல்லா தலைவர் கொல்லப்பட்டதைக் கண்டித்துக் கடந்த சில வாரங்களுக்கு முன்பு இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேலின் முக்கிய நட்பு நாடான அமெரிக்காவுக்கு மத்திய கிழக்கில் பல பகுதிகளில் ராணுவ தளங்கள் உள்ளன. குறிப்பாக பஹ்ரைன், குவைத், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய பகுதிகளில் ராணுவ தளங்கள் உள்ளன.

ஈரானின் அணுசக்திநிலையங்களைத்தாக்கப் போவதாக முதலில் தகவல்கள் வெளியாகின. ஏனென்றால் அணுசக்தி தளங்களைத் தாக்குவது என்பது பெரிய சர்வதேச போர் குற்றம். அதேநேரம் அணுசக்தி தளங்களைத் தாக்கப் போவதாக அச்சுறுத்துவது கூட குற்றம் தான். அது சர்வதேச உரிமைகளுக்கு எதிரானது.

### அரபுரக உறவு மேம்பாடுமா ?

பல்வேறு விஷயங்களில் ஈரான் –சவூதி இரண்டு நாடுகளும் தீவிரமாக பல காலமாக மோதி வந்தன. இரண்டு நாடுகளுக்கும் இடையில் வரலாற்று ரீதியாக மோதல்கள் பல நிலவி வருகின்றது. ஈரான் என்பது ஷியா பிரிவு இஸ்லாமியர்கள் அதிகம் இருக்கும் நாடு ஆகும். சவுதி அரேபியா என்பது சுனி பிரிவு முஸ்லீம் அதிகம் இருக்கும் நாடு ஆகும்.

இதன் காரணமாக இரண்டு நாடுகளும் பல்வேறு விஷயங்களில் கடுமையாக மோதி வருகின்றன. முக்கியமாக மத்திய கிழக்கில் நடக்கும்பல்வேறுபோர்களில்இரண்டுநாடுகளும் எதிர் எதிர் துருவங்களில் இருக்கின்றன.

யேமனில் நடக்கும் போரில் ஹவுதி போராளிகளை ஈரான் ஆதரிக்கிறது. அதே சமயம் அந்நாட்டு அரசு மற்றும் ராணுவத்தை சவுதி அரேபியா ஆதரிக்கிறது. இது போன்ற பல போர்களில் இரண்டு நாடுகளும் எதிர் எதிர் திசையில் இருந்து திரை மறைவு போர் செய்து கொண்டு இருக்கின்றன.

நீண்ட கால பரம எதிகளான ஈரான் – சவுதி அரேபியா இரண்டு நாடுகளும் தங்கள் உறவை புதுப்பிப்பதாக அறிவித்து உள்ளன. சீனா மேற்கொண்ட பேச்சுவார்த்தை காரணமாக இரண்டு நாடுகளும் தற்போது கைகோர்க்க நட்புறவாக முடிவு செய்துள்ளன.

ஆயினும்ஈரான்மீதானஇஸ்ரேல்தாக்குதலின் பின்னரும் தொடரும் அரபு நாடுகளின் மௌனம் எதுவரை என்பது புலப்படவில்லை.

# ரயில் ஆசனத்தின் அடியிலிருந்து ரி -56 ரக தோட்டாக்கள் மீட்பு



மருதானையிலிருந்து - பெலியத்த நோக்கி பயணித்த ரயிலில் மூன்றாம் வகுப்பு பெட்டியொன்றின் ஆசனத்திற்கு அடியிலிருந்து ரி-56 துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 57 தோட்டாக்களை செவ்வாய்க்கிழமை காலை ரயில்வே பாதுகாப்பு படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

பெலியத்த ரயில் நிலையத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் ரயில் பெட்டிகளை சோதனையிட்ட போது, இருவர் ரயிலில் இருந்து வெளியேறியனர் எனவும், பின்னர் இருவரும் அமர்ந்திருந்த ஆசனங்களுக்கு அடியில் தோட்டாக்கள் அடங்கியபை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(05)

# மட்டு. வெல்லாவெளியில் மாடுகள் களவாடப்படுவது அதிகரிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாடுகள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெல்லாவெளி, தும்பங்கேணி பகுதியில் கிருஷ்ணபிள்ளை - சுகுமாறன் என்பவர் பராமரிக்கப்பட்டு வந்த பசுவும் கன்றுக் குட்டியும் திங்கட்கிழமை இரவு கட்டிவைத்த பால்குடிக்கும் கன்றுக்குட்டி களவாடப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளன.

களவாடியவர்கள் அதனை பற்றைக் காட்டுப் பகுதியில் வைத்து இறைச்சிக்காக வெட்டியுள்ளதுடன் அதன் மீதிப்பகுதியினை அப்பகுதியில் வீசியெறிந்துவிட்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறான சமூக விரோத செயலில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

போரதீவுப்பற்று பகுதியில் தொடர்ச்சியாக மாடுகள் களவாடப்பட்டு வருவதாகவும் இவை தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(05)

# மதவாச்சியில் ஆணின் சடலம்

அநுராதபுரம், ஏ - 9 வீதியில் மதவாச்சி நகரத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்க வில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் இறுதியாக கறுப்பு நிற காற்சட்டை ஒன்றைஅணிந்திருந்துள்ளார்ளபொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக அநுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# குளவி கொட்டுக்கு இலக்காகி முதியவர் பரிதாப உயிரிழப்பு

கம்பஹா, கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மிதிரிகல பிரதேசத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கிரிந்திவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கம்பஹா, மிதிரிகல பிரதேசத்தைச் சேர்ந்த 75வயதுடையமுதியவரே உயிரிழந்துள்ளார்.

இவர் குளவி கொட்டுக்கு இலக்காகி வத்துப்பிட்டிவல வைத்தியசாலையில் சேர்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்எனகிரிந்திவெலபொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

# தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கவே தேர்தலில் இணைந்து போட்டியிடுகின்றோம்

## ச. குகதாசன் தெளிவுபடுத்தல்



திருகோணமலையில் தமிழர் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கவே தேர்தலில் இணைந்து போட்டியிடுகிறோம் என இலங்கை தமிழ் அரசு கட்சிமுதன்மைவேட்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் செவ்வாய்க்கிழமைமாலை இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

வடக்கு, கிழக்கில் திருகோணமலையில் மாத்திரமே தமிழர் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க இலங்கை தமிழ் அரசு கட்சி தமிழ்த்தேசிய கூட்டமைப்பாக கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுகின்றது. - என்றார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை மாநகர சபைக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்




கல்முனை மாநகர சபைக்கு எதிராக மனித உரிமை மீறல் வழக்கொன்றினை இலங்கை நீதிக்கான மய்யம் கல்முனை மேல் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை வழக்கு தாக்கல் செய்துள்ளதாக நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டமுதுமானி ஷஃபி எச். இஸ்மாயில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

கல்முனை மாநகர சபை பகுதியில் புதிய நீர் இணைப்புக்காக மாநகர சபையின் அனுமதி பெற்று தோண்டப்படுகின்ற கொங்கிரீட் வீதிகள் இன்னும் செப்பனிடப்படாததால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றமையை எமது மையம் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்குமாறு கல்முனை மாநகர சபை ஆணையாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தது.

இதற்கு கல்முனை மாநகர சபை நிர்வாகத்தினரால் பொறுப்புணர்ச்சி யற்ற கண்துடைப்பான பதில் எமக்கு வழங்கப்பட்டது. இதனை எமது மய்யம் ஏற்றுக்கொள்ளாததால் இன்று மாநகர சபைக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

இவ்வழக்கிற்கு மய்யத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத், பிரதித் தலைவர் யூ.கே.எம்.றின்சான் ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

புதிய நீர் மின் இணைப்பைப் பெறும் விண்ணப்பதாரர்கள் கல்முனைமாநகரசபைக்குஏற்கனவேபுதியநீர்இணைப்புக்காக தோண்டப்படும் வீதியினை செப்பனிடுவதற்கான கட்டணத்தை செலுத்திய பின்னரே நீர் இணைப்புக்காக அனுமதியை பெற்றுக்கொள்கின்றனர்.

ஆனால் கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லைக்குள் நீர் இணைப்பு வேலைகள் முடிவடைந்த பின்னரும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் தோண்டப்பட்ட வீதிகள் மாநகர சபையினால் செப்பனிடப்படாமல் நெடுங்காலமாக காணப்படுகின்றது.

இது மாநகர சபை கட்டளை சட்டத்தினை மீறும் ஒரு செயற்பாடாகும். மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 46 மற்றும் 47 ஆவது பிரிவின்படி, வீதிகளை நிர்மாணிப்பதும் பராமரிப்பதும் மாநகர சபையின் அடிப்படைப் பொறுப்பு களாகும். இந்த அடிப்படை கடமைகளை நிறைவேற்றத் தவறுவது, மாநகர சபையின் சேவைத் தன்மையை கடுமையான கேள்விக்குட்படுத்துகிறது.

ஒரு குறிப்பிட்ட சேவையினை வழங்கவென நிதி அறவிடப்பட்டு பின்னர் சேவையை வழங்காதிருப்பது ஒரு நிதி மோசடியாகும். மக்களிடம் அறவிடப்பட்ட நிதிக்கு என்ன நடந்துள்ளது? என சந்தேகம் எழுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீதிக்கான மய்யம் மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் தோண்டப்பட்ட வீதிகளை செப்பனிடும் பணியை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்ததோடு, மாநகர சபை நடவடிக்கை எடுக்காது போனால் மாநகர சபைக்கு எதிராக ஒரு சட்ட நடவடிக்கை எடுப்போம் என்று அன்றே தெரிவித்திருந்தோம்.

அரசு நிறுவனம் ஒன்றுக்கு மாகாண மேல் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளதானது இதுவே வரலாற்றில் முதற்தடவையாகும். - என்றார். (05)






# அம்பாறை பொலிஸார் மக்களுக்கு விடுத்துள்ள முக்கிய அறிவித்தல்





அம்பாறை மாவட்டத்தின் அண்மைக்காலமாக பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக பொதுமக்களுக்கு முக்கிய அறிவுறுத்தல்கள் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் நிந்தவூர், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை, சவளக்கடை, காரைதீவு, சாய்ந்தமருது, பெரிய நீலாவணை, உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளிலும் கடந்த சில நாள்களாக வீரமுனை, மருதமுனை, மண்டூர் , பகுதிகளிலும் அதிகளவான வீடு உடைத்து நகை ,பணம் திருடுதல் மற்றும் மோட்டார் சைக்கிள் திருடப்பட்ட சம்பவங்கள் அதிகரித்துள்ளன.



குறித்தசட்டவிரோதசம்பவங்களில் வீடுகள் உடைத்து திருடும் சம்பவம் இரவு 1:00 மணிக்கும் அதிகாலை 4:30 மணிக்கும் இடையில் இடம்பெற்று வருவதுடன் வீட்டின் ஜன்னல் கிறில் மற்றும் ஓடுகள் பிரிக்கப்பட்டு வீட்டு உரிமையாளர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது இடம் பெறுவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தவிர மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் சமகாலங்களில் பல்வேறு பொலிஸ் நிலைய பகுதிகளிலும் அதிகரித்துள்ளன. பெரும்பாலும் பொது இடங்களில் தரித்து வைக்கப்பட்ட நிலையிலும் வயல் வேலை காரணமாக வீதி ஓரங்களில் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டியில் வைத்து விட்டு செல்லும் பொருள்கள் உள்ளிட்டவைகள் திருடப்படுகின்றன.

மேலும் சில பொலிஸ் பிரிவுகளில் வைத்தியசாலை, பொதுச்சந்தை, நகரப் பகுதிகளிலும் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டமை சிசிடிவி காணொளிகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

எனவே, இரவு நேரத்தில் வீட்டின் மறைவான இடங்களை பரீட்சித்து பெறுமதியான பொருள்களை பொதுமக்கள் பாதுகாப்பதுடன் , வீட்டின் ஜன்னலுக்காக பொருத்தப்படும் கிறிலை உறுதியான வகையில் பொருத்தி கொள்ளுமாறும் , சீலிங் பேன் பயன்படுத்தும் வீடுகளில் அதிக திருட்டுகள் இடம்பெறுவதால் அதிக சத்தம் இடும் இவ்வாறான மின் விசிறிகளை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்டுள்ளனர்.

அத்துடன் பகல் நேரத்திலோ, இரவு நேரத்திலோ தேவையற்ற முறையில் சந்தேகத்திற்கிடமாக மாஸ்க் மற்றும் தொப்பி அல்லது தலைக்கவசம் அணிந்து நடமாடுபவர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சட்டவிரோத செயற்பாடுகள் சம்பந்தமாக அவதானமாக இருப்பதுடன் சந்தேக நபர்கள் தொடர்பாக தகவல் ஏதேனும் தெரிந்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தெரியப்படுத்தமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# அரசு ஆட்சியை கைவிட்டுச் செல்லும்நிலை வந்தால் நாட்டை பொறுப்பேற்க முடியுமான அணி நாடாளுமன்றில் வேண்டும்

## ருவன் விஜேவர்த்தன கூறுகிறார்



ஆளும்தரப்பு அதிகாரத்தில் கைவிட்டுச் செல்லும் நிலை ஏற்பட்டால், நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியுமான அணியொன்று நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும்.

அவ்வாறான அனுபவமுள்ளவர்கள் புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர்களாக களமிறக்கி இருக்கிறது என புதிய ஜனநாயக முன்னணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளரும் ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவருமான ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகஇருந்தது. எமதுநாட்டின்பொருளாதாரத்தை ரணில் விக்ரமசிங்கவுக்கே கட்டியெழுப்ப முடியும்.

நாடு வங்குரோத்தடைந்த போது, நாட்டை பொறுப்பேற்க அவர் மாத்திரமே முன்வந்தார். நாங்கள் அனைவரும்தற்போதுநிம்மதியாகவாழக்கூடியசூழலை ஏற்படுத்திக்கொடுத்தது ரணில் விக்ரமசிங்கவாகும்.

என்றாலும் ஜனாதிபதி தேர்தலில் துரதிஷ்டவசமாக நாட்டு மக்கள் வேறு ஒரு தீர்மானத்தை எடுத்தார்கள். தற்போது மக்கள் நியமித்திருக்கும் ஜனாதிபதியின் காலை வாற நாங்கள் நினைப்பதில்லை.

இருந்தபோதும் ஜனாதிபதியின் சில தீர்மானங்கள் குறித்து எங்களுக்கு திருப்தியடைய முடியாது. அவருக்கு இருக்கும் அனுபவ குறைவே இதற்கு காரணமாகும். நாட்டின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்பது என்பது இலகுவான பொறுப்பல்ல.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பொருளாதாரம்தொடர்பில்இருக்கும்திறமைகாரணமாக நாட்டின் பொருளாதாரத்தை ஓரளவு ஸ்திர நிலைக்கு கொண்டுவர அவருக்கு முடியுமாகியது.

ஆனால் அநுரகுமார திஸாநாயக்க அன்று சொன்ன விடயங்களுக்கும் தற்போது தெரிவிக்கும் விடயங்களை பார்க்கும்போது ஒன்றுக்கொன்று முரண்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது. அதனால் இந்த தேர்தலிலாவது நாட்டுக்கு சரியான தலைமைத்துவத்தை வழங்குவதற்கு நாங்கள் சிந்திக்க வேண்டும்.

அனுபவமில்லாத பிரிவினர் அரசாங்கத்துக்கு நியமிக்கப்பட்டால் அதனால் நாட்டுக்கு நல்லது நடக்கும் என நாங்கள் நினைப்பதில்லை. இன்று திசைகாட்டியில் இருப்பவர்கள் யார் என்றுகூட மக்களுக்கு தெரியாது.

என்றாலும் எமது அணியில் திறமையான அனுபவமுள்ளவர்கள் இருக்கிறார்கள். தற்பாஹிதைய ஆட்சியாளர்களுக்கும் தங்களின் பொறுப்பை கைவிட்டு செல்ல நேரிட்டால், மீண்டும் நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு அனுபமுள்ள அணியொன்று நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும். – என்றார். (05)

# தமிழர்கள் இல்லாது தமிழ் தேசியம் சாத்தியமாகாது

## அங்கஜன் இராமநாதன் கூறுகிறார்



தமிழர்கள் இல்லாமல் தமிழ்த் தேசியம் சாத்தியமாகாது. அவ்வாறு இருக்கையில் தமிழர் தாயகத்தில் தமிழர்களை இல்லாமல் செய்து விட்டு பிரான்ஸிலும் கனடாவிலுமா தமிழ்த்தேசியத்தைப் பேசப்போகின்றனர்? என அங்கஜன் இராமநாதன்கேள்வியெழுப்பியுள்ளார்.

தென்மராட்சி - நாவற்குழிப் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

அழிவுப்பாதையை நோக்கி தமிழ் மக்கள் இட்டுச் செல்லப்படுகின்றனர். இதனை எம் மக்கள் உணர வேண்டும். எம் மக்களை இவ்வளவு காலமாக வழிநடத்திய தமிழ்த்தேசிய வாதிகள் சாதித்தது என்ன?

எம் மக்கள் தொகையை பெருமளவு குறைத்தது தான் அவர்கள் செய்த ஒரே சாதனை. 70வருடங்களாக போராடி உயிர்களை உடைமைகளை பல தலைமுறைகளின் எதிர்காலத்தை இழந்தது எமது சொந்தநாட்டில்இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வதற்காகத் தானா?

தமிழர் இன்றி தமிழ்த் தேசியம் சாத்தியப்படாது. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 9 ஆக இருந்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் தற்போது 6ஆக குறைவடைந்துள்ளது.

இந்த ஆறு மூன்றாக குறைவடைய வெகு காலம் தேவைப்படாது. ஏன் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்?

தாமேஏகப்பிரதிநிதிகள்எனகூறிக்கொண்டுஇத்தனை காலமாக வென்ற தமிழ்த்தேசியவாதிகள் மக்களை வாழ வைப்பதற்காக எதையாவது செய்தார்களா? மக்களின் அடிப்படை தேவைகள், பொருளாதார விருத்திக்காக என்ன திட்டங்களை செய்தார்கள்?

எனவே மக்கள் இந்தத் தேர்தலில் தேடலுடனும் தெளிவுடனும் வாக்களிக்காவிட்டால் அடுத்த ஐந்து வருடங்களில் மேலும் பல இழப்புக்களைச் சந்திக்க நேரிடும். - என்றார். (05)



# வீசா ஏதுமின்றி இலங்கையிலே தங்கிய பங்களாதேஷிகள் கைது

வீசா இன்றி சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த 06 பங்களாதேஷ் பிரஜைகள் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என சீதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சீதுவை அமன்தொலுவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

18, 23, 26, 39 மற்றும் 43 வயதுடைய ஆறு பங்களாதேஷ் பிரஜைகளே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# போதைப்பொருளுடன் ஏறாவூரில் மூவர் கைது

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மீராகேணி பகுதியில் உள்ள வீடொன்றில் போதைப்பொருளுடன் பெண் உட்பட இருவர் சந்தேகத்தின் பேரில் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர்பொலிஸாருக்குக்கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 24, 33 மற்றும் 36 வயதுடையவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 11 கிராம் 230 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 10,500 ரூபா பணம் மற்றும் போதைப்பொருள் பொதி செய்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# குருணாகல் - நீர்கொழும்பு வீதியில் கோர விபத்து

## மூவர் காயம்

குருணாகல் – நீர்கொழும்பு வீதியில் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்; என பொலிஸார் தெரிவித்தனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகிப் பாதுகாப்பு வேலியில் மோதி அருகிலிருந்த கால்வாயில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த கார் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது காரில் பயணித்த மூவரும் காயமடைந்துள்ள நிலையில் பிரதேசவாசிகளின் உதவியுடன் தங்கொட்டுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒருவரின் உடல் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(05)


பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் யாழ், கிளிநொச்சி மாவட்டங்கள்

சுதந்திரம் பொது வாக்கெடுப்பு எமது பிறப்புரிமை கோரிக்கை

சிவாஜிலிங்கம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

செயலாளர் நாயகம் தமிழ்த் தேசியக் கட்சி



X



அரசாங்க உத்தியோகத்தர்களே!

வணக்கம்

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான தபால் வாக்களிப்பில் கலந்துகொள்ள இருக்கும் உங்களிடம் ஒரு வேண்டுகோள். இதை ஒரு தனிப்பட்ட வேண்டுகோளாக ஏற்றுக்கொண்டு, எனக்கு சங்குச் சின்னத்திலும் 2ஆம் இலக்கத்திற்கு மேலேயும் புள்ளடியிட்டு ஆதரிக்குமாறு, தயவுடன் வேண்டுகின்றேன்.

எனது 50 வருட அரசியல் வாழ்வில், நான் நடத்திய போராட்டங்கள், நினைவேந்தல்களை அரசாங்கம் தடுத்ததை உடைத் தெறிந்த விடயம் உட்பட பாராளுமன்றத்தின் உள்ளும், புறமும் போராடியதை நீங்கள் அறிவீர்கள் அந்தப் பயணத்தைத் தொடர உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றேன்.

- தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சர்வதேச சமூகம் , வடக்கு கிழக்கு மக்கள் புலம் பெயர் தமிழர்கள் உட்பட அனைவரும் வாக்களிக்கக்கூடிய பொது மக்கள் வாக்கெடுப்பு ஒன்றை (Referendum) நடாத்துமாறு கோருகின்றோம்.
- தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுரிமைக்காக போராடுவோம்.

1 2 3 4 5 6 7 8 9

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி

## பிரதமரின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இந்த விழாவின் ஒளி நம் இல்லங்களை ஒளிரச் செய்வது மட்டுமல்லாமல், நீதி, கருணை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் ஆழமான உணர்வை நம் இதயங்களில் ஒளிர வைக்கட்டும்.

இருளின் மீது ஒளியின் வெற்றியைக் கொண்டாடும் நாம், கட்டமைப்பு ரீதியான பாரபட்சங்கள் மற்றும் விளிம்பு நிலைக்குள்ளாக்கப்படல் என்பவற்றுக்கு எதிராகப் போராடுபவர்களின் தொடர்ச்சியான போராட்டங்களை நினைவுபடுத்திக் கொள்வோம்.

அனைவரும் சுதந்திரம், கண்ணியம் மற்றும் உரித்தை அனுபவிக்கக் கூடிய ஒரு உலகைக் கட்டியெழுப்ப நாம் மறு பரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது.

'வளமான தேசம் – அழகான வாழ்க்கை' என்ற எமது அரசியல் கொள்கையின் மூலம் எங்கள் கூட்டு இலக்கானது அனைவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், அனைவரையும் உள்ளடக்குவதை உறுதி செய்வதும் ஆகும்.

இந்த தீபாவளி அனைவரது வாழ்க் கையிலும் ஒளியையும், மகிழ்ச்சியையும், புதுப்பித்தலையும் தரட்டும் என்றுள்ளது.

## ஐமச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோல்வியடைந்து வரிகளைக் குறைக்க முடியாதுபோயுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி, பொதுத் தேர்தலுக்கு முன்னரே எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு சர்வதேசநாணயநிதியத்துடன் உடன்பாட்டை எட்டியது. எனவே, நேரடி வரி மற்றும் மறைமுகவரிகளைஎம்மால்குறைக்கமுடியும். வற்வரி, உழைக்கும்போது செலுத்தும் வரி முதலியவற்றைக் குறைக்க ஆளும்தரப்பால் முடியாவிட்டாலும், ஐக்கிய மக்கள் சக்திக்கு இந்த வரிகளைக் குறைக்கும் இயலுமை காணப்படுகிறது.

நாடாளுமன்றஅதிகாரம்எமக்குகிடைக்கும் பட்சத்தில் முன்னாள் ஜனாதிபதியினால் கைச்சாத்திடப்பட்ட மக்கள் விரோத சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு, மக்கள் சார் உடன்படிக்கையை மேற்கொள்வோம்.

2033ஆம் ஆண்டிலிருந்து கடனை செலுத்த சர்வதேசநாணயநிதியம் இணக்கம் தெரிவித்த போதிலும், கடனை 2028 முதல் அதாவது இன்னும் 4 ஆண்டுகளில் செலுத்துவதற்கான இணக்கப்பாட்டை முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான ஆளும்தரப்பு ஏற்படுத்தியிருந்தது.

இவ்வளவு மந்தமான, வீழ்ச்சி கண்டுள்ள பொருளாதாரத்தைக் கொண்ட நாடு நான்கு வருடங்களில் கடனை அடைக்க முடியாது. ஆனால்அதைச்செய்யவேண்டியநிர்பந்தத்திற்குள் நிற்கின்றோம். அதற்கு விரைவான பொருளாதார வளர்ச்சி அவசியம்.

இப்படியே தொடர்ந்தால், 2028 இன்னும் கடினமாக மாறி இதைவிடவும் வங்குரோத்தடைவோம். வரிச்சுமையைக் குறைக்கும் புதிய சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை எட்ட முடியும் என்பதால், அதற்கான சந்தர்ப்பமும் ஏதுவான வேலைத்திட்டமும்எம்மிடம்காணப்படுவதால் நாடாளுமன்ற பெரும்பான்மையை ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்க வேண்டும்.

வரிசையில் நிற்கும் காலம் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளது. பொருட்களின் விலை அதிகரித்து, பொருட்களுக்குதட்டுப்பாடுஏற்பட்டு, தேங்காய்க்கும்கூட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் அதிருப்தியின் அழுத்தம் அதிகரித்துள்ளது. இந்த பாதையை வெற்றிப் பாதையாக மாற்றியமைக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கிறது என்றார்.

## ரஞ்சனுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பளிக்குமாறு கம்பஹா மாவட்ட சுயேச்சை வேட்பாளர் கே.எம். மகிந்த சேனாநாயக்க உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த தனது மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கில் தேர்தல் ஆணைக்குழு, கம்பஹா மாவட்ட தேர்தல் அதிகாரி, ரஞ்சன் ராமநாயக்க மற்றும் பலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

## தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகளுக்கு இடையூறு ஏற்படாதவகையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir






# இலங்கையில் செயற்கை நுண்ணறிவு சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை

## பேராசிரியர் ரொஷான் ஜி. ராகெல் தெரிவிப்பு



இலங்கையில் செயற்கை நுண்ணறிவு சட்டத்தை அமுல்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பேராசிரியர் ரொஷான் ஜி. ராகெல் தெரிவித்தார்.

இலங்கையின் செயற்கை நுண்ணறிவு கொள்கை திட்டம் இவ்வருட ஆரம்பத்தில் வெளியிடப்பட்டது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, தொழில்நுட்ப வளர்ச்சியுடன் சமூகவாழ்வை மேம்படுத்துவதற்கான திட்டமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கொள்கையின் நோக்கம் 2030 இற்குள் இலங்கையை செயற்கை நுண்ணறிவு மையமாக மாற்றுவது மற்றும் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகும் என்று பேராசிரியர் ரொஷான் ஜி. ராகெல் மேலும் தெரிவித்தார்.(05)

# நாகை மீனவர்கள் 12 பேரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குக

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நாகப்பட்டினம் மீனவர்கள் 12 பேரையும் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு இந்தியமத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதம் -

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் கடந்த 26 ஆம் திகதி படகில் மீன்பிடிக்கச் சென்றிருந்தபோது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவது இந்தியாவில் குறிப்பாக தமிழகத்திலுள்ள மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. இந்த ஆண்டில் இதுவரை 30 சம்பவங்கள் நடந்துள்ளன.

கடந்த 27 ஆம் திகதி நிலைவரப்படி 140 மீனவர்கள் மற்றும் 200 மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசு வசம் உள்ளன. எனவே இந்த பிரச்சினையை முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் சென்று இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.(05)




# பொலிஸார் பணிக்கு இடையூறு விளைவித்த பெண் உட்பட மூவர் மீராங்கேணியில் கைது

ஏறாவூர் மீராங்கேணி பகுதியில் 11,230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் போதைபொருள் வியாபாரி ஒருவரை கைது செய்த போது பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்ததுடன் பொலிஸார் மீது தாக்குதலை மேற்கொண்ட பெண் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவமானது திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியிலுள்ள வீடொன்றை சுற்றிவளைத்த போது போதைபொருள் வியாபாரி ஒருவர் 11,230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்து பொலிஸாரின் மீது தாக்குதல் மேற்கொண்ட 36 வயதுடைய பெண் ஒருவர்,24 வயதுடைய ஆணொருவர் மற்றும் போதைபொருள் வியாபாரி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், கைதுசெய்யப்பட்டவர்களைநீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# விமான நிலையத்திற்கு குண்டு மிரட்டல் போலித் தகவல் வழங்கியவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெடிகுண்டு இருப்பதாக போலித் தகவல் வழங்கிய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் குருணாகல், வாரியப்பொல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குருணாகல், வாரியப்பொல பிரதேசத்தில் வசிக்கும் 67 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கடந்த 27 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்திற்கும், விமான சேவை நிலையத்திற்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெடிகுண்டு இருப்பதாக போலி தகவல் வழங்கியுள்ளார்.

இதனால், கட்டுநாயக்க விமானநிலையத்தில்பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.(05)

# விமானத்தில் வெடிகுண்டு மிரட்டல் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

ஆளும்தரப்பு அறிவிப்பு

இந்திய விமானத்தில் வெடிகுண்டு எச்சரிக்கை குறித்து புலனாய்வு பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

திங்கட்கிழமை கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட இந்திய விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

குறித்த வெடிகுண்டு மிரட்டல் இந்தியன் எயார்லைன்ஸுக்கு சொந்தமான விமானமொன்றுக்கே விடுக்கப்பட்டிருந்தது.

குறித்த விமானம் வழமைபோன்று திங்கட்கிழமை மாலை 04.05 மணிக்கு தரையிறங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வெடிகுண்டு மிரட்டல் காரணமாக 08 நிமிடங்களுக்கு முன்னதாக கட்டுநாயக்கவில் தரையிறக்கப்பட்டுள்ளது. சம்பவத்தின் போது விமானத்தில் 108 பயணிகள் மற்றும் 08 பணியாளர்கள் இருந்துள்ளனர்.

பறந்து கொண்டிருந்த விமானத்தில் வெடிகுண்டுகள் இருப்பதாக இந்தியாவின் புதுடெல்லியில்உள்ளஇந்தியன்எயார்லைன்ஸ் தலைமை அலுவலகத்திற்கு தொலைபேசி அழைப்பு வந்த நிலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள மேலாளருக்கு செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, விமானத்தை அவசரமாக தரையிறக்க நடவடிக்கை எடுத்துள்ளதோடு, மீட்பு நடவடிக்கை அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலைய ஓடுபாதைக்கு வரவழைக்கப்பட்டு சோதனைகளை மேற்கொண்டனர்.

இந்நிலையில், ஏற்கனவே இந்தியாவின் மும்பையிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்த இரண்டு விமானங்களில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளதாக மிரட்டல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, கட்டுநாக்க விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2024இல் வெளியிடப்பெற்றது